# அருள்மிகு கற்குளி காளியம்பாள் ஆலயம்

## முக்கொம்பன், பூநகரி.



# திருவூஞ்சற்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அருள்மிகு கற்குளிகாளியம்பாள் ஆலயம்

**முக்கொம்பன், பூநகரி.**



# திருவூஞ்சற்பா

**ஆக்கம்: சிவத்திரு கா. கருணானந்தம் ஐயா**

**பிரதமகுரு காளியம்பாள் ஆலயம் முக்கொம்பன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## காப்பு

சீர்மேவு முக்கொம்பன் நடுவணாக
சிறந்த கற்குழியிற் கோவில் கொண்டு
பார்மேவும் உயிர்கட்டுப் பந்தமான
பண்டை வல்வினைகளைப் பாரிற்சாய்க்கும்
கார்மேவு கருங்குளலாள் காளியம்மை
களிப்பாகத் திருவூஞ்சற் பாவைச்சாற்ற
நீர்மேவு சடையண்ணல் நிமலன்மைந்தா
நித்தியனாங் கணபதியே நின்றே காப்பாய்

வேதங்கள் நான்குமே கயிறதாக
நிகரில்லா ஆகமங்கள் சட்டமாக
பூதங்கள் ஐந்துமொரு பலகையாக
புன்மையிலாப் புராணங்கள் புடை நின்றாட
நாதங்கொள் நாதனது நடனத்தோடு
நவின்று நடம் பயின்றவளே நல்லோர் ஏத்தும்
சீதங்கொள் கற்குளியிற் சிறந்து மேவும்
சின்மயளே காளியம்மா ஆடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலை மகளும் மலை மகளும் வடந்தொட்டாட்ட
அருகினிலே அருள் வாணி வீணை மீட்ட
சிலைவளைத்த சிவனார்தங் கணங்களெல்லாம்
சிறந்த நன் மலர் தூவிச் சீர்கள் செய்ய
இலை துயிலும் மாயவனார் எழுந்து வந்து
இதமான வாழ்த்துக்கள் இனிது கூற
கலையோடு பெடை மேவும் காவின் நடுவிற்
கற்குளியிற் காளியரே ஆடீரூஞ்சல்

கொஞ்சுமொழி கிஞ்சுகம் மிஞ்சிவரு கானமதில்
நெஞ்சினிய கஞ்சமலர் துஞ்சியெழு வண்டினாங்கள்
முந்திவரு மந்தியொரு தந்திகளுலாவிவர
பந்தியென மானினமும் சிந்தி நிறை தேன் மலர்களும்
ஆடல்புரி வானவர்கள் பாடல்பயில் பாவலர்கள்
தேடலுறு மூடல் வனமாகிவரு கற்குளியிலே
கன்னலென வன்னமொழி மின்னலென மேனியொடு
முன்னிவரு காளியே ஆடீரூஞ்சல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டனொடு முண்டனைக் கண்ட துண்டம் செய்து
சார்ந்து வரும் அவுணரைச் சாய்த்தெழுந்து
முந்திவரு கோபமொடு பொங்கியெழு சூறையாக
அந்தி பகலாயிந்த அண்டம் நடுங்கிநிற்ப
ஆனந்த வடிவான தானந்தமில்லாத அரனாருடன்
ஊனங்களில்லாத ஊர்த்துவத்துடனாடினாய்
இகபரமிரண்டிலும் சுகமெலாம் நல்கிடும்
அகநிறை காளியம்மையே ஆடீரூஞ்சல்

பரவெளிக்கிடமான பரையாகி உரையிறந்த
அருள்ஞான மோனமாய் ஆகாயவெளியிலாடி
ஆங்கார ரூபமாய் ஓங்கார ஒலியாகி ஆதியாகி
ரீங்காரமிடு வண்டு நீங்காத மலர்வனத்தில்
இன்பமே வடிவான இயல்பான கருணையாகி
அன்பருக் கருனான அமுதினை அருளுவாயே
மாவோடு பலா வாழை மாண்பான பூகமும்
பூவோடு பொலி கற்குளிக் காளியே ஆடீரூஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகமணி தேவனார் பாகமுறு தேவியாய்

சோகமறு சோதியாய் சுடரொளி வடிவமானாய்

சுந்தரீயாகியோர் சூடாமணிச்சுடராகியே

அந்தரீ நீலியாய் ஆனந்த ரூபமானாய்

வாட்டமுறுமுயிர்களை வாட்டிடும் வல்வினை

ஓட்டமுற உலகினைக் காக்கின்ற அன்னையானாய்

விண்ணோங்கு கொண்றை விளங்கு கா நின்ற

பண்ணோங்கு கற்குளிக் காளியே ஆடீரூஞ்சல்

காடு களற்றியோர் களனியது வாக்கியே

சேனை பயிர் செய்தோர் சிறுமை கண்டே சினந்து

காலனது கோபமாய் சூலமொடு பந்தம் சுளற்றிவர

ஓலமிட்டே உழவர் ஓடவே உடன் துரத்தி

கண்ணகி தாள்பணியும் அயிலாந்தி தன்னோடு

முன்னை வினையறுப்பவள் மூள்கின்ற கோபமாகி

அடலேறுபோலவே ஆர்ப்பரித்தாடிய அரிவையே

உடல்பாதி சிவமான கற்குளிக்காளியே ஆடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கோண சக்கரத்துள்ளிருப்பவளே மூவர்க்கும்

முதலாக முன்னிநிற்பவளே

நாலான வேதத்தின் நாயகியும் நீயே

நாதாந்தத்துள்ளே நடனமிடுவாயே

ஐந்தான தொழில்களை ஆற்றுபவள் நீயே

ஆங்காரமாகிவரும் அன்னையே காளி

ஆறான சமயங்களாகி நின்றவளே

அம்மையே கற்குளியில் ஆடீரூஞ்சல்

இன்னல்கள் களையுந்தாயே ஈசனார் பாகத்தாளே

முன்னிய வினைகளெல்லாம் மூழ்கிட அருள்வாய் நீயே

செந் நெல்கள் பொலியும் பளனம் சீரான கதலி பூகம்

மன்னியமா பலாவின் மருங்கினில் மருவுவாயே

தன்னிகரில்லாதவளே தலைவியே தாள் பணிந்தோம்

கன்னியே கருணைக் கடலாகி நின்றாய் நீயே

இன்னியங் கறங்கிநிற்ப இசைவாணரினிது பாட

வன்னி சூழ் கற்குளிக் காளியே ஆடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

சீரான மும்மாரி சிறந்து வாழி
சிறப்பான பூசை முறை செழித்து வாழி
பாரான பூமித்தாய் பரந்து வாழி
பண்பான வேதங்கள் பாரில் வாழி
ஏரான உழவர் கை என்றும் வாழி
இயல்பான கல்விமுறை இனிது வாழி
காரான குழலாளே காளியம்மா
கருணை மழை பொழிவாயே வாழி வாழி

## லாலி

லாலி லாலி தேவி லாலி லாலி
சின்மய ரூபினியே லாலி லாலி
வேதவுருவானவளே லாலி லாலி
வித்தையெல்லாம் நல்கிடுவாய் லாலி லாலி
அறிவொளியாய் நிற்பவளே லாலி லாலி
ஆறுதலைத் தந்திடுவாய் லாலி லாலி
கன்ம வினை அறுப்பவளே லாலி லாலி
கற்குளிக் காளியம்மா லாலி லாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரிக்கை

ஆதிசக்தியானவளே எச்சரிக்கை
அகிலமெல்லாம் காப்பவளே எச்சரிக்கை
நீதியுருவானவளே எச்சரிக்கை
நின்மலியே பொன்மயிலே எச்சரிக்கை
பாதி சிவனானவளே எச்சரிக்கை
பண்டை வினையறுப்பவளே எச்சரிக்கை
காதிலங்கும் குணடலியே எச்சரிக்கை
கற்குளிக்காளியம்மா எச்சரிக்கை

## பராக்கு

ஆடல் வல்லானின் அருகாயமர்ந்து
கோடல் தவிர் வாழ்வே பராக்கு
குளிரான கங்கைத் தளிரான மேனி
பரிவான பார்வைப் பரையே பராக்கு
குறையாத செல்வம் நிலையான கல்வி
அலையாக வீசும் ஆதியே பராக்கு
கற்றவர்கள் போற்றும் நற்றவர்கள் ஏத்தும்
கற்குளியில் வாழும் காளியே பராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

மங்களம் ஜெய மங்களம் மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம் மங்களம் ஜெய மங்களம்

கற்குழிக் காளியற்கு ஜெய மங்களம்
கண் மூண்றுடையோர்க்கு ஜெய மங்களம்

ஆதார கணபதிக்கு ஜெய மங்களம்
ஆலிலைமேற் துயில்வோர்க்கு சுப மங்களம்

வேலேந்தும் வேலவனே ஜெயமங்களம்
வீரபத்திரநாதனே சுபமங்களம்
மேளாயிற் தேவியரே பெருமங்களம்
பூபாலிப் பிள்ளையார்க்கு சுப மங்களம்

சேத்திர பாலகற்கு ஜெய மங்களம்
சீரான தேவர்கட்கு சுப மங்களம்
நல்லறிவாளருக்கு ஜெய மங்களம்
நாற்றிசையும் பெருகிடவே சுப மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னை நிகர் பூநகரி மண்ணிலுறு முக்கொம்பன் தன்னில் நிறை கற்குளியிலே

மின்னல் நிகர் சின்ன இடை சென்னிவளர் தண்ணளியும்

கன்னலென இன்மொழியின் பண்ணனைய புன்னகையுமாய்

மண்ணிலுறை இன்னுயிர்கள் முன்னை வினை பின்னடைய அன்னையென ஆடுமயிலே

விண்ணனையும் தேவர்களுன் கண்ணருளை உன்னிவரும் மென்மை வளர் காளியுமையே.



சிவா பதிப்பகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org